DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE FAST TRACK COURT (M.L) UTHAMAPALAYAM

Case No. STC.No.120/2026

Deposition of DW1

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சாம்சன் |
| Father's / Husband Name | : | |
| Village | : | ஊட்டி |
| Taluk | : | ஊட்டி |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of September 2026.

புகார்தாரர் ஆஜர் இல்லை. BNSS 279 ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை:</u>

1. புகார்தாரரை எனக்கு தெரியாது. பாலாஜி பைனான்ஸ் என்ற நிறுவனத்தின் உரிமையாளரான பாலசுப்ரமணியன் என்பவரிடம் 22.03.2017 ல் ரூ.175000/- பணம் வாங்கினேன். மாதம் ரூ.7000 வீதம் 10 மாதத்திற்கு செலுத்தியுள்ளேன். குடும்ப கஷ்டத்தினால்மீதி தொகை கட்ட முடியவில்லை. 31.10.2025 ல் Gpay மூலம் பாலசுப்ரமணியனுக்கு ரூ.10 ஆயிரம் அனுப்பியுள்ளேன். நான் கடன் வாங்கியபோது பாலசுப்ரமணியனிடம் 5 காசோலைகள் கொடுத்திருந்தேன். ஒரு வருடத்திற்கு முன்பு புகார்தாரரிடமிருந்து வழக்கறிஞர் அறிவிப்பு வந்தது. மேற்படி அறிவிப்பு வருவதற்கு முன்பு பாலசுப்ரமணியன் என்னை பார்த்து சம்பத்திராயத்திற்கு அறிவிப்பு அனுப்பினேன் என்று கூறினார். அதனால் நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. பின்னர் காசோலையை வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் 20.03.2026 ல் ஊட்டி S.P அலுவலகத்தில்

பாலசுப்ரமணியன் மீது புகார் கொடுத்திருந்தேன்.

2. புகார்தாரரிடம் நான் எந்த பணம் வாங்கவில்லை. ஊட்டி, ATC தியேட்டர் பாலசுப்ரமணியன் அலுவலகம் வைத்துள்ளார். அங்கு வைத்துதான் எனக்கு பணம் கொடுத்தார். இந்த வழக்கு தாக்கல் செய்தபின்புதான் நான் முதலில் தேனிக்கு வருகிறேன். நான், சிவாஜி, ரவிக்குமார், மெர்சி ஆகியோர்கள் முன்னிலையில் பாலசுப்ரமணியனிடம் பணம் வாங்கினேன். நான் பாலாஜி பைனான்சில் பணம் வாங்கியதற்கான புத்தகத்தை தாக்கல் செய்கிறேன். **மேற்படி ஆவணம் எ.சா.ஆ. 1 ஆகும்.** நான் பாலசுப்ரமணியனுக்கு G-pay மூலம் 31.10.2025 ம் தேதியன்று ரூ.10 ஆயிரம் செலுத்தியதற்கான Screen shot தாக்கல் செய்கிறேன். **மேற்படி ஆவணம் எ.சா.ஆ. 2 ஆகும்.** (மேற்படி ஆவணம் நகல் என்ற ஆட்சேபணை பேரில் குறியீடு செய்யப்படுகிறது, எதிரி தேவைப்பட்டால் செல்போனை தாக்கல் செய்வதாக கூறினார்.) ஊட்டி, S.P. அலுவலகத்தில் பாலசுப்ரமணியன் மீது கொடுத்த புகார் மனுவின் நகலை தாக்கல் செய்கிறேன். **மேற்படி ஆவணம் எ.சா.ஆ. 3 ஆகும்.** (மேற்படி ஆவணம் நகல் என்ற ஆட்சேபணை பேரில் குறியீடு செய்யப்படுகிறது). 2014 ஏப்ரல் மாதத்தில் ரூ.1 லட்சம் வாங்கினேன். மேற்படி தொகைக்கு ஆதரவாக தாவா காசோலையை கொடுத்தேன். அதனை திருப்பி செலுத்திவிட்டேன். ஆனால் மேற்படி காசோலையை திருப்பி தரமால் பின்னர் ரூ.175000/- வாங்கினேன்.

<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.09.09 18:41:36 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam